REGD. No. M. 6311 — PHONE No. 55630

தனி இதழ் ஒரு அணா
இலங்கையில் 10 சதம்
மலர் 1] [இதழ் 275

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர்.. அண்ணாதுரை

சந்தா விபரம்
உள்நாடு (இலங்கை உட்பட)
ஆண்டு ரூ. 24—0—0
6 மாதம் ரூ. 12—0—0
3 மாதம் ரூ. 6—0—0
வெளிநாடு:
ஆண்டு ரூ. 30—0—0
6 மாதம் ரூ. 15—0—0
3 மாதம் ரூ. 7—8—0

"THE NAM NADU" A TAMIL DAILY : THE OFFICIAL ORGAN OF: THE D.P.F

சென்னை: சித்திரை 23௨ புதன் (5—5—54) ★ ★ ★ வெளியூர்: சித்திரை 24௨ வியாழன் (6—5—54)

நியூட்டன்—கண்ணான் கண்ட கனி!

'பழம் குலுங்கும் மரத்தில் கல் வீசுவது இயற்கையே!'

'பழைய எண்ணங்கள் அகற்றப்பட வேண்டும்'

கண்வனைப் பிடுங்கினர்; மனைவியைக் காணிக்கையாக்கினர், பிள்ளைக் கறி சமைத்தனர்; ஆனால், குறை போகவில்லை'

சமூக சீர்திருத்த மாநாட்டின் தலைவர் தோழர் **ப. உ. சண்முகம் ஆற்றிய தலைமையுரை**

1—5—54-ல், சேலம் விக்டோரியா மைதானத்தில், பரசுராமன் பந்தல்—வள்ளியப்பன் அரங்கில் நடைபெற்ற சேலம் மாவட்ட தி மு கழக இரண்டாவது சமூக சீர்திருத்த மாநாட்டில் தோழர் ப. உ. சண்முகம் அவர்கள் தலைமையுரை ஆற்றுகையில் கூறியதாவது:—

"என்னைத் தலைமை தாங்குமாறு வழிமொழிந்து பேசிய தோழர் நெடுஞ்செழியன் அவர்கள், நான், திருவண்ணாமலை நகர சபைத் தலைவராக இருந்தபோது, மாற்றுக் கட்சியினரான ஓ பி. ராமசாமி அவர்களுக்கும் காமராசர் அவர்களுக்கும் வரவேற்புத் தந்து அரசியல் கண்ணியத்தை நிலைநாட்டியதாகக் கூறினார்கள். நான் சொல்லிக்கொள்ளப் பிரியப்படுகிறேன்—'அண்ணாவின் வழிவந்த நாம், என்றுமே, எப்பொழுதுமே கண்ணியத்தைக் கைவிடமாட்டோம்.' எவ்வளவு பெரிய நிலையில் இருந்தாலும், கழகத்தவராகிய நாம், கண்ணியமாக நடந்துகொள்வதுதான், நம்மை இன்று நாட்டிலே ஒரு பெரும் மக்கள் சக்தியாக வளர்த்திருக்கிறது.

நாம் வெறும் அரசியல் நிலைகளை மட்டும் பேசிவிட்டுச் செல்லும் சுகவாசிகளல்ல; சமுதாயம், நாம் பேசுகிற அரசியல் நிலையினால், திருந்தி நல்வாழ்வைப் பெற்றுவிட முடியாது; சமுதாயத்தின் பழமை எண்ணங்கள் அடியோடு அகற்றப்பட்டாக வேண்டும்.

நாம் அதற்காக, சமூக சீர்திருத்தப் பணியை மேற்கொண்டுள்ளோம். அந்த நேரத்தில்தான் நம்மை நாஸ்திகர்கள் என்று பழிக்கிறார்கள்.

பழுத்த மரம் ஒன்று இருந்தால், அதன் பழங்களைத் திருட்டுத்தனமாகப் பெற கல்லால் அடிக்கத்தான் செய்வர். அதைப்போன்றே மக்கள் சக்தி என்னும் பழங்களை உடைய மரமாக நாம் பழுத்து நிற்பதால், எத்தர்கள் சிலர், பழங்களைப் பெற, பழிச்சொல்லால் அடித்துப் பார்க்கிறார்கள். நாம் அதுபற்றிக் கவலை கொள்ளத் தேவை இல்லை.

நாம் எல்லாம், பிரிட்டானியக் கடற்கரையிலே, சாக்சானிய வெள்ளையர்கள் மீன் பிடிக்கக் கற்றுக்கொண்டிருந்த காலத்தில் ஆழ்ந்த அலைகடலை அடக்கி ஆளும் சக்திபெற்றிருந்த பழம்பெரும் நாகரிகம் மிக்க திராவிடச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள்.

எகிப்திய ரோமானிய நாகரிகங்கள் எல்லாம் தோன்ற ஆரம்பித்த காலத்தில் பழுத்துப் பயன்தந்துகொண்டிருந்தது திராவிட நாகரிகம்—சரித்திரம் சொல்லுகிறது அப்படி!

அந்தச் சமுதாயம் இன்று எந்த நிலையில் இருக்கிறது? எப்படித் தாழ்ந்தது இந்த இழிநிலைக்கு?—'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்,' என்று வாழ்ந்தனர் மக்கள் என்று சங்க கால நூல்கள் செப்புகின்றன; 'ஆயிரம் தெய்வங்கள், ஆயிரம் உண்டிங்கு சாதி' என்று இன்று பாடினார் பாரதியார்—ஏன் இந்த நிலைக்கு திராவிட சமுதாயம் வந்தது?

அன்று அவ்வைப் பாட்டி, 'அன்னையும் - பிதாவும் முன்னறி தெய்வம்,' என்றனள்; இன்று 'ஜெமினி அவ்வையார்' விநாயகரே தெய்வம் என்பானேன்?—எண்ணிப் பார்க்க வேண்டாமா?

வாழ்ந்த இனம், வீழ்ந்துவிட்டதே! காரணம் என்ன? இந்த நாட்டிலே கடவுள்கள், இந்த வீழ்ந்த இனத்தை வாழவைக்க முடியவில்லை. 'கடவுளை நம்பினோர் கைவிடப்படார்,' என்றெண்ணி அனுதினமும் ஆண்டவன் மீது

(4-ம் பக்கம் பார்க்க)

'மதம்—எத்தர்களின் ஏவலாளி!'

ஜாதி, சமய நம்பிக்கை தொலைய வேண்டும்

யார் வகுப்புவாதிகள்? சமத்துவம் பேசும் நாமா? பேதம் கற்பிக்கும் வேதமோதிகளா?

சீர்திருத்தவாதிகள் எத்தகு இன்னலுக்கும் அஞ்சுவதில்லை

சமூக சீர்திருத்த மாநாட்டில் கோகுலகிருட்டிணன் ஆற்றிய திறப்புரை

1—5—54ல் நடைபெற்ற சேலம் மாவட்ட தி. மு. கழக இரண்டாவது சமூக சீர்திருத்த மாநாட்டில், திறப்புரை ஆற்றுகையில், தோழர் பி. ஆர். கோகுலகிருட்டிணன், பி. ஏ., பி. எல்., அவர்கள் பேசியதாவது;—

"திருத்துங்கள் சமுதாயத்தை" என்ற ஈரோட்டுச் சொல்லை சிரமேற் கொண்டு திராவிட முன்னேற்றக் கழகத்தவராகிய நாம், 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்,' என்னும் நிலை, நாட்டிலே வளரப் பாடுபடுகிறோம். தி மு. கழகம், சிறந்ததோர் அரசியல் லட்சியத்தை உடைய தென்றாலும், லட்சியம் ஈடேற்றப்பட்டு கழகம் ஆட்சிப் பீடத்திற்கு வரும்போது மக்கள் எல்லோரும் பகுத்தறிவு பெற்றவர்களாக, சமுதாயம் சீர்திருத்தப்பட்டதாக இருக்க வேண்டுமென ஆசைப்படுகிறது.

நாம் செய்கிற இந்தச் சீர்திருத்தப் பணி, நாட்டிலே உள்ள எல்லோர் பாராலும் பாராட்டப்பட வேண்டிய ஒன்று. சமுதாய சீர்கேடுகளைப் போக்க நாம் மேற்கொள்ளும் பணியினை கட்சிப் பாகுபாடு இன்றி பாராட்ட வேண்டும்.

நாம் அளவில்லாக் கஷ்டங்களிடையே, இந்தச் சமுதாய சீர்திருத்தத்தைச் செய்து வருகிறோம் என்பது எல்லோருக்கும் தெரியும். அரும்பாடுபட்டு நாம் வளர்க்கும் இந்த அரிய சீர்திருத்தப் பயிரை யாரும் அழித்துவிடாது பார்த்துக் கொண்டாக வேண்டும்.

நாம் செய்துவரும் சமுதாய சீர்திருத்தம், இந்த மனித சமுதாயத்திற்குப் புதிதல்ல; மனிதன் காட்டுமிராண்டி நிலையிலிருந்து, இன்று பெரும் நாகரிகம் படைத்தவனாயிருக்கிறான்.

கண்டதை உண்டு, புலித்தோல் ஆடைகட்டி மரத்தடி நிழலை இல்லமாகக் கொண்டு, கண்டாரிடம் இன்பம் துய்த்துவந்த மனிதன், இன்று உண்ண ருசி உள்ள உணவையும், அதைச் சுவைபட பல வகையில் தயாரிக்கும் முறையையும், உடுக்க நல்ல மெல்லிய ஆடையையும், அதை நெய்யும் முறையையும், உகந்த இல்லமும், இல்லற இன்பமான இல்லக் கிழத்தியும், பெற்று வாழ்கிறான்.

இப்படி படிப்படியாக சீர்திருத்தப் பாதையில் மனித சமுதாயம் முன்னேறி வந்துள்ளது. இன்று, உலக மக்கள் பெற்றுள்ள பகுத்தறிவு வாழ்வை, பழமை நீங்கிய புதுமை வாழ்வை, திராவிட சமுதாயத்திற்குத் தரத்தான் நாம் பாடுபடுகிறோம்.

இந்தச் சீர்திருத்தப் பணியை மேற்கொள்ளும்போது சீர்திருத்தவாதிகள் எல்லாம் எத்தகு இன்னல்களுக்கும், இடுக்கண்களுக்கும் அஞ்சியதில்லை.

கிரேக்க சமூகத்தை அதன் எண்ணங்களிலே புதுமைக் கருத்துக்களைக் காண பாடுபட்ட சாக்ரடீஸ் பட்ட துன்பங்கள் எல்லோரும் அறிந்தவை.

சமூக சீர்திருத்தப் பணியைச் செய்கிற நம்மை இந்த நாட்டிலே வகுப்புவாதிகள் என்று சொல்கிறார்கள். சொல்பவர்கள் யார் என்று பார்த்தால், வேதங்கள் பல கற்பிக்கும் வேதங்கள் ஓதித் திரியும் பார்ப்பனர்கள்—நம்மைப் பார்த்து வகுப்புவாதிகள் என்கின்றனர்.

நாட்டு மக்கள் நன்றாக எண்ணிப்பார்க்க வேண்டும்—யார் வகுப்புவாதிகள் என்று!

நால்வகை வருணங்களையும், அதற்குள் நாலாயிரம் சாதி முறைகளையும் புகுத்திய பார்ப்பனர் வகுப்புவாதிகளா? 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்,' என்று சொல்லும் நாம் வகுப்புவாதிகளா?

சாதிகள் பலவற்றைப் பிரித்து அவைகளுக்கெனத் தனித்தனி தொழிலும் கற்பித்த பார்ப்பனர்கள், இன்று என்ன செய்கிறார்கள்?

தோட்டி குப்பை தள்ளுபவனாகவும், சக்கிலி மாடு தின்னும் புலையனாகவும், வண்ணான் துவைப்பவனாகவும், மருத்துவன் க்ஷவரம் செய்பவனாகவும் இருக்க வேண்டுமென நீதிகள் எழுதி வைத்துள்ள பார்ப்பனர், இன்று, அவர்களால் நீசத் தொழில் என்று கருதப்படும் பிணமறுக்கும், மாடறுக்கும் வேலை செய்யவில்லையா? பிணத்தை அறுத்துப் படித்துப் பட்டம் பெற்ற பெரிய டாக்டராகவில்லையா ரெங்காச்சாரி? என்றாலும், அவர் உயர்ந்தவர்—பார்ப்பனர் என்று சொல்வது எவ்வளவு பித்தலாட்டம்?

வகுப்புகள் ஒழிய வேண்டுமென்பது, வகுப்புவாதமாகாது! வகுப்புகள் நிலைக்க வேண்டுமென்று சொல்வதுதான் நியாயமற்ற வகுப்புவாதம்!

எல்லோருக்கும் சமநீதி கிடைக்க வேண்டுமென்பதற்காக, வகுப்புவாரி உரிமை வேண்டுமென்கிறோம் நாம்! அவர்கள், தாங்கள் மட்டும் வாழ வழியும், வகையும் இருந்தால் போதும் என்கிறார்கள்!

அவர்கள், அவர்களுடைய முறைப்படி செய்யும் திருமணங்கள்தான் செல்லும் என்கிறார்கள்! நாம் திருமணங்களை, அவரவர் இஷ்டப்படி செய்ய உரிமை வேண்டும் என்கிறோம்!—இதிலே எது நியாயமானது என்பதை மக்களே தீர்மானித்துக் கொள்ளலாம்.

நாட்டிலே நிலவுகிற சாதிய எண்ணங்கள் ஒழிக்கப்பட நாம் பாடுபடுகிறோம். சாதிகள் ஒழிக்கப்படவேண்டுமானால், யார், "நான் உயர்ந்தவன்—அவன் தாழ்ந்தவன்" என்று சொல்கிறார்களோ, யார் அதற்கான அடையாளங்களை, சின்னங்களை, 'வால்'களை உடையவர்களாயிருக்கிறார்களோ, அவர்கள் மீது 153-ஏ. இந்தியன் பீனல் கோட் சட்டம் திரும்பப்பட வேண்டுமே தவிர, சாதிகள் ஒழிப்புப் பணி புரியும் எங்கள் மீதல்ல!

சாதிகளையும், சாதிகளை நிலைநாட்ட உதவுகிற மதங்களையும் நாம் எதிர்க்கிறோம்; அழிய வேண்டியன அவை, என்கிறோம்; மதங்கள் எத்தர்களின் ஏவலாளிகளாக இருப்பதால், மக்களை மடமைக்கு இழுத்துச் செல்வதால், அவை கூடாதென்கிறோம்!

மதங்கள் கற்பிக்கிற கடவுள்கள், நாட்டிலே மக்களுக்காகச் செய்யப்பட்டுள்ள சட்டங்களை, மக்கள் மதியாவண்ணம் அவர்களைத் தூண்டுகின்றனவே!

ஏகதார மணச் சட்டம் இன்று இருக்கிறது; அதே நேரத்தில், 'முருகக் கடவுளுக்கு, வள்ளியும், தெய்வயானையும் என இரு மனைவிகள் உண்டென்றால்' மக்கள், அவ்வழியே இரு மணங்கள் செய்துள்ளபோது நாம் செய்தால் என்ன என்றுதானே நினைப்பர்!

(4-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 5—5—54 புதன்

அரசியல் சூதாட்டம்

இந்திய கலாசாரம்—அப்படி ஒன்று இருந்தால்—அறநெறி பற்றி எல்லாம், குடியரசு தலைவர், துணைத் தலைவர் உள்ளிட்ட காங்கிரஸ் தலைவர்கள் அனைவரும் சிறப்பித்துக் கூறிவருகின்றனர். அக்காட்டுக் கூச்சலில் சில குடிகளும், தடிகளும் கலந்துகொண்டு, 'கங்காதரா மாண்டாயோ' என் நம் போக்கில் அண்டம் கிழியக் கத்தித் தீர்க்கின்றன, 'அறநெறி' பற்றி! இன்று பெரும்பாலான மக்களிடம் காணப்பெறும் அறநெறியின் தன்மையை அளவுகோலாகக் கொண்டு, முன்னாள் மக்களிடம் நடைமுறையில் இருந்ததாகச் சொல்லப்படும் அறநெறி நிலையை அளந்து பார்த்தால், அந்த நாள் மக்கள் போக்கு பற்றி, காங்கிரஸ் தலைவர்கள் கூறும் கூற்று, எத்தகைய பொய் மூட்டையாக இருக்கிறது என்பது தெற்றென விளங்கிவிடும். முன்னாள் மக்களிடம் காணப்பட்டதின் விட்ட குறை தொட்ட குறைதான், இன்று, இந்நாள் மக்களிடம் காணப்படும் மறச் செயல். ஒன்றுக்கு ஒன்றுத் தொடர்பு கொண்டு, மனப் பண்பு வளர்ந்து வருவது என்பது உயிர் நூல் கற்றோர் முடிவு. நிற்க,

பாகிஸ்தான் கிழக்கு வங்கத்தில், இதுவரை ஆட்சி பீடத்தில் அமர்ந்திருந்த முஸ்லிம் லீக் கட்சியை முறியடித்தது கூட்டு முன்னணி. தேர்தலில் முஸ்லிம் லீக் பெற்ற முழுத் தோல்வி, வரலாறு காணாத காட்சி!

தேர்தலில் வெற்றி பெற்றக் கூட்டு முன்னணி, கிழக்கு பாகிஸ்தான் மக்கள் முன்னிலையில், இருபத்தொரு நலன்கள் அடங்கிய தேர்தல் அறிக்கை ஒன்றை நீட்டியது. வாக்காளர் மக்களும், லீக் ஆட்சி தொலைந்து, கூட்டு முன்னணி ஆட்சி ஏற்பட்டால், தங்கள் குறைகள் களையப்பட்டு, புதுவாழ்வு பெறுவோம் என்று உறுதியாக நம்பினர். அத்தகு உயர் வாழ்வு பெறுவதற்காகவே, முஸ்லிம் லீகை, தேர்தலில் தலைகாட்டாது விரட்டி விரட்டி அடித்தனர்.

தங்களுக்கு நல்வாழ்வு தரத் தவறிவிட்ட லீக் ஆட்சியை ஒழித்துவிட்டு, அது இருந்த இடத்தில், நல்வாழ்வைத் தேடித் தருவதாக வாக்களித்த கூட்டு முன்னணியை ஆட்சிபீடமேற்ற வாக்காளர்கள் முன்வந்ததில் குற்றமில்லை. தேர்தல் காலத்தில் அரசியல் கட்சிகள் தரும் வாக்குறுதிகளை நம்பி, வாக்காளர்கள், பெருவாரியான வாக்குகளைக் கொடுத்து, கூட்டு முன்னணிக்கு, ஆட்சிப் பொறுப்பேற்கும் அந்தஸ்தைத் தேடித் தந்ததிலும் தவறில்லை.

தேர்தல் காலத்தில், தேர்தலில் போட்டியிடும் கட்சிகள், மக்கள் ஆதரவு பெற, வெளியிடும் திட்டங்களை—கொடுக்கும் வாக்குறுதிகளைச் சீர்தூக்கிப் பார்த்துத்தான், எந்தக் கட்சியை ஆதரிப்பது என்ற முடிவிற்கு வரவேண்டியதாக இருக்கிறது. அந்த ஒரு வாய்ப்பைத் தவிர, அதாவது தேர்தல் காலத்தில் அரசியல் கட்சிகள் கொடுக்கும் வாக்குறுதிகளை ஆராய்ந்து பார்த்து, எதை ஆதரிப்பது என்ற முடிவிற்கு வருவதைத் தவிர, வேறு வாய்ப்பு கிடையாது, வாக்காளர்களுக்கு!

அரசியல் கட்சிகளால் தரப்படும் தேர்தல் அறிக்கைகளில், ஒவ்வொரு கட்சியினரும் எடுத்துக் காட்டியுள்ள திட்டங்களை, ஒன்றோடொன்று ஒப்ப வைத்து, அலசிப் பார்த்து, எந்த கட்சியின் திட்டம் மக்களுக்கு நன்மை தரக் கூடியது; எந்தக் கட்சியின் திட்டம் வெறும் பதவி பெறும் தந்திரம் என முடிவிற்கு வந்தாக வேண்டும். இதுவுமல்லாமல், எந்தக் கட்சி வெளியிட்டுள்ள திட்டம் உடனடியாக நடைமுறைக்குக் கொண்டு வரக்கூடியது, எந்தக் கட்சி கூறும் ஏற்பாடு வெறும் ஏட்டளவு இன்பவாசகம் என்பதையும் கண்டறிந்து வாக்காளர் தீர்ப்பளிக்க முனைய வேண்டும்.

இவ்வளவும் நடைமுறையில் நடைபெற வேண்டுமானால், அதற்கான அரசியல், பொருளியல் அரிச்சுவடிகளைக் கற்றறிந்தவர்களாக, வாக்காளர்கள் இருந்தாக வேண்டும். இத்தகைய அறிவுத் திறம் வாக்காளர் அனைவராலும், சுக்காலத்திலும் பெறமுடியாது என்பது உண்மையானாலும், ஏறத்தாழ வாக்காளர் மொத்தத் தொகையில் சரி பகுதியினராவது பெற்றிருக்க வேண்டும். ஒழுங்கான மக்களாட்சி முறை நியாயமாக அமைவதற்கு, வாக்காளர்களிடம் கட்டாயமாக இருந்து தீரவேண்டிய இந்த இலட்சணம், மக்களாட்சி முறைக்கு இயல்பாக வேண்டப்படும் முன்னேற்பாடாகும். இந்த முன்னேற்பாடு, வாக்காளர்களான பொதுமக்களிடம் குறைந்து காணப்படுகிற வரையில், மக்களாட்சி முறை, முழுத்தன்மைபெற்று, முழு வாழ்வுடன் வெற்றியோடு விளங்குவது என்பது ஒருக்காலும் முடியவே முடியாது. அதுவரை, அப்பகுதியில மக்களாட்சி முறை இருக்கிறது. இப்பகுதி ஆட்சியும் மக்களாட்சி முறைப்படிதான் நடைபெறுகிறது என்பதெல்லாம், உண்மைக்கு மாறுனது-வீண் பெருமை-மனமறிந்து புரிகிற அரசியல் சூதாட்டம்!

மக்களாட்சி முறையின் கீழ், ஒழுங்கான மக்களாட்சி ஏற்பாடு இயங்குவதற்கான முன்னேற்பாடாக, மக்களுக்கு இருந்து தீரவேண்டிய அரசியல் அறிவின் முக்கியம் பற்றி மேலே எடுத்துக் கூறினோம். அந்த அரசியல் அறிவு எனும் இன்றியமையாத முன்னேற்பாடு, ஒழுங்கான மக்களாட்சியை நிறுவுவதற்கு எப்படி வாக்காளர்களுக்கு இருந்து தீரவேண்டியது முக்கியமோ, அதைப் போன்றே அரசியல் கட்சிகளில் அங்கம் பெற்று வாக்குறுதிகளைத் தரும் தலைவர்கள் என்பவர்களபாலும் விழிப்புணர்ச்சி இருந்தாக வேண்டும். அவர்களுடைய முற்கால பிற்கால அரசியல் நடைமுறைகளைக் கண்காணித்து வருவதில் வாக்காளர்களுக்கு, விழிப்புணர்ச்சி மிக மிகத் தேவைப்படுகிறது. இவ்விழிப்புணர்ச்சி குறைந்து, அரசியல் அறிவு ஒன்று மட்டுமே வாக்காளர்களிடம் அதிகமாக இருந்தாலும், மக்களாட்சி வெற்றிக்கு அது துணை செய்யவே செய்யாது. இவ்விழிப்புணர்ச்சியில் குறைவு ஏற்படுமானால், சுயவர்களின் பதவி வேட்டைக் களமாகிவிடும் ஆட்சிபீடம்!

அதுகாலை, மக்களாட்சி ஏற்பாடு என்பதும், அரசியல் சூதாடிகளின் சூதாடி மடமாகிவிடும். கிழக்கு பாகிஸ்தானில், வெற்றி பெற்றக் கூட்டு முன்னணி இந்த உண்மையைத்தான் எடுத்துக் காட்டிக்கொண்டு இருக்கிறது. இது பற்றி நாளை விளக்கமாக எழுதுவோம்.

கோவாவிற்குத் தன்னாட்சி உரிமை!

போர்ச்சுகல் சர்க்காரின் புதிய சதி!

கோவா, மே 4—

இந்தியத் துணைக் கண்டத்தில் போர்ச்சுகல் நாட்டுக்குச் சொந்தமாக உள்ள கோவா நகருக்கு, போர்ச்சுகல் நாட்டுக்குட்பட்ட 'தன்னாட்சி' உரிமை வழங்கி, 'காமன்வெல்த்' அந்தஸ்து தருவது என கோவாவில் கவர்னர் ஜெனரலாக இருக்கிற பிரிகேடியர் பாலோ பெனார்ட் சைசிடஸ், திட்டம் ஒன்றை உருவாக்கி இருக்கிறார்.

இந்தியாவுடன் இணைய வேண்டுமென கோவா மக்கள் செய்து வரும் கிளர்ச்சியைத் தணித்துவிடுவதற்கே, இத் 'தன்னாட்சி' ஏற்பாடு எனச் சொல்லப்படுகிறது.

போர்ச்சுகல் சர்க்காரிடம், மேற்படி திட்டம் பற்றிக் கலந்து பேசுவதற்காக, கோவா கவர்னர் போர்ச்சுகலுக்குக் கூடிய விரைவில் போவார் எனத் தெரியவருகிறது.

அவர் இல்லாத காலத்தில், அவருக்கு பதிலாக, கோவா உயர்நீதி மன்றத்தில் பிரதம நீதிபதியாக இருந்துவருகிற பெரிரா என்கிற கோவா குடிமகன் கவர்னர் ஜெனரலாக வேலை பார்க்கக்கூடும் என நம்பப்படுகிறது.

கோவாவிற்குத் தன்னாட்சி உரிமை வழங்குவதினால், போர்ச்சுகலுக்குச் சொந்தமாகக் கடல்கடந்த பகுதிகளில் உள்ள குடியேற்ற நாடுகளும், தன்னாட்சி கோரிக்கையைக் கிளப்புமே என்ற ஐயம் பிறந்திருக்கிறது. குடியரசு சுதந்திரக் கோரிக்கையை பலமாக வலியுறுத்திவரும் மொசாம்பிக் பகுதியில், தன்னாட்சி கோரிக்கை மேலும் தீவிரமாக மாறும் என அஞ்சப்படுகிறது.

எகிப்து முன்னாள் ராணி மறு மணம்!

கெய்ரோ, மே 3—

எகிப்திய முன்னாள் மன்னர் பரூக்கின் முன்னாள் ராணியான நாரிமன் இன்று டாக்டர் ஆதாம்—எல்—நக்கிப் என்பவரை மறு மணம் செய்துகொண்டார். முந்திய திருமணத்தைப் போலன்றி இந்த இரண்டாம் திருமணம் எளிமையாக நடந்தேறியது.

மயூராட்சி பாசன திட்டம்

1956ம் ஆண்டில் பூர்த்தி அடைந்துவிடும்

மேற்கு வங்காளத்திலுள்ள மயூராட்சி பாசனத் திட்டத்தின் மூலம், பாசனத் தண்ணீர் சப்ளை ஏற்கெனவே ஆரம்பமாகிவிட்டது இந்தத் திட்டம் 1955—56ல், பூர்த்தியடையும், அதன்மூலம் சுமார் 7 லட்சம் ஏகரா பிரதேசத்துக்குப் பாசன வசதி கிடைக்குமென்றும், சுமார் 4,00,000 டன் உணவுத் தானியம் கூடுதலாகக் கிடைக்குமென்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

'தமிழுக்கு ஏன் இடமில்லை?'

இனிமேல் இவ்வாறு நடைபெறாதாம்!

கொழும்பு, மே 3—

பிரிட்டிஷ் ராணி எலிசபெத் இலங்கைக்கு விஜயம் செய்த போது அவருக்கு தமிழில் வரவேற்புப் பத்திரம் வாசிக்கப் படாதது பற்றி இலங்கை பார்லிமெண்டில் ஸ்ரீ சுந்தரலிங்கம் கண்டித்துப் பேசினார்.

இது பற்றிய நிலைமையை சபாநாயகர் விளக்குகையில் தமிழ், சிங்களம் இரண்டும் அரசாங்க மொழியாகும் இனிமேல் இம்மாதிரி நடக்காதென்றும் உறுதி கூறினார்.

'டல்லஸ் ஓட்டம்?'

'பிராவ்தா' வர்ணனை!

மாஸ்கோ, மே. 4—

"அமெரிக்கா தோற்றுவிட்டதால் ஜினிவாவிலிருந்து அமெரிக்க அயல் நாட்டு மந்திரி டல்லஸ் ஓட்டம் பிடித்தார்" என்று சோவியத் கம்யூனிஸ்ட் கட்சிப் பத்திரிகை "பிராவ்தா" வர்ணிக்கிறது.

இந்தோ—சீனாவிலிருந்து வியட்மின்னும் கம்யூனிஸ்ட் எதிர்ப்பு கோஷ்டிகளும், மாநாட்டில் கலந்து கொள்வதைக் காரணமாகக்காட்டி டல்லஸ் வாஷிங்டனுக்குத் திரும்புவதாக வர்ணிக்கிறது.

அமெரிக்காவின் 'படைப்பலக் கொள்கைக்கு இது தோல்வியேயாகும்,' என்று அது குறிப்பிடுகிறது.

பயமுறுத்தல்!

கேப்டவுன், மே 4—

தென்னாப்பிரிக்காவில் உள்நாட்டுக் கொள்கையைப் பற்றி 'யுனெஸ்கோ' மீண்டும் தாக்கிப் பேசினால், தென்னாப்பிரிக்கா அக்குழுவிலிருந்து விலகிக் கொள்ளுமென பிரதம மந்திரி மலான் சட்ட சபையில் தெரிவித்தாராம்.

இனிப்பான செய்தி

புதுடில்லி, மே 4—

ஜூன் மாதத்துக்குள் இந்தியாவுக்கு வெளிநாடுகளிலிருந்து லட்சம் டன் சர்க்கரை வந்து சேருமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

காஷ்மீர் சிக்கல்

மீண்டும் ஐ. நா. செல்ல நேரிடுமாம்!

கராச்சி, மே 4—

"காஷ்மீர் பிரச்னையில், மீண்டும் ஐ. நா. சபையை அணுக வேண்டிய கட்டத்துக்கு நாங்கள் வந்துக் கொண்டிருக்கிறோம்" என்று பாகிஸ்தான் பிரதமர் கூறினார்.

கொழும்பு மாநாட்டின்போது நேருவிடம் தாம் காஷ்மீர் பிரச்சினையைப் பற்றி பேசவில்லை என்றும், 'சமாச்சார வைசஸ'யே தாம் விரும்புவதாகவும், ஆனால் பாகிஸ்தானுக்கு அமெரிக்க உதவி போன்ற சம்மந்தமில்லாத விஷயங்களை நேரு இடையிடையே கிளப்புவதாயும் முகமதலி கூறிவிட்டு, காஷ்மீர் பேச்சில் ஆரம்பத்தில் இருந்த நம்பிக்கை இப்போது தமக்கு இல்லையென்றும் குறிப்பிட்டார்.

கேள்வி கேட்க உரிமை இல்லை

ரஷ்யக் குறிப்புக்கு பாகிஸ்தான் பதில்

கராச்சி, மே. 4—

"இராணுவ உதவி பெறுவது பாகிஸ்தானின் சொந்த விஷயம் என்றும் அதைப்பற்றி யாருக்கும் கேள்வி கேட்க உரிமை இல்லை" யென்றும் அமெரிக்க இராணுவ உதவி பற்றி ரஷ்யா அனுப்பிய ஆட்சேப மறுப்புக்கு பாகிஸ்தான் தனது பதிலில் தெரிவித்துள்ளது என்று கூறப்படுகிறது.

* * *

ரஷ்யா நினைப்பது 'நியாயமற்ற முடிவாம்!'

மாஸ்கோ, மே. 4—

அமெரிக்க இராணுவ உதவியைப் பெறுவதன் மூலம் பாகிஸ்தான் இராணுவம் அன்னியர் தலைமையின்கீழ் வந்துவிடும் என்ற சோவியத் ஆட்சேபக் குறிப்பை நிராகரித்து பாகிஸ்தான் அனுப்பிய பதிலை மாஸ்கோவிலுள்ள பாக். தூதர் அயல் நாட்டிலாகாவில் சேர்ப்பித்தார்.

பாகிஸ்தான் தனது தளங்களை அமெரிக்காவிடம் ஒப்படைக்கிறது என்று ரஷ்யா நினைப்பது "நியாயமற்ற முடிவு" என்று பாக். பதில் தெரிவிக்கிறதாம்!

* * *

தெளிவுபடுத்திவிட்டனர்?

"நம் நிலைமையை நன்கு தெளிவுபடுத்தி விட்டோம்," என்று ரஷ்யாவுக்கு அனுப்பியுள்ள பதிலைப் பற்றி கூறுகையில், ராஜதந்திர மொழியில் பாக். பிரதமர் குறிப்பிட்டார்.

சென்னைக்கு மேலும் 3 புது கல்லூரிகள்

சென்னை, மே 4—

சென்னை மாநிலத்தில் இந்த ஆண்டு மேற்கொண்டு மூன்று கல்லூரிகள் ஆரம்பிக்கப்படுமென்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

சென்னை சர்வகலாசாலை மூன்று கல்லூரிகளுக்கும் தற்காலிகமாக அங்கீகாரம் அளித்திருக்கிறது.

இவைகளில் இரண்டு பெண்கள் கல்லூரி.

இவை யாவும் விடுமுறைக்குப் பின் ஆரம்பமாகும்.

மகாஜன கல்லூரி (ஈரோடு); அழகப்பா பெண்கள் கல்லூரி (காரைக்குடி); ஆக்ஸிலியம் பெண்கள் கல்லூரி (காட்பாடி)—ஆகிய மூன்றுக்கும் அங்கீகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது.

"ஏடுகளும் சொல்லாடல்களும் புக முடியாத இடங்களும் உண்டு"

"நாடகமும்-சினிமாவும் அக்குறைபாட்டை போக்குகின்றன"

தி. மு. கழகத்திற்கும் கலைத் துறைக்கும் உள்ள தொடர்பு பற்றி டி. கே. தாமரைச்செல்வன்

சேலம் சமூக சீர்திருத்த மாநாட்டில், தோழர் டி கே. தாமரைச் செல்வன்—"நாடகமும், சினிமாவும்,"—எனும் பொருள் பற்றிப் பேசுகையில் கூறியதாவது:—

"தி. மு. கழகம், நாடகத்திலும், சினிமாவிலும் கொண்டுள்ள தொடர்பு பற்றி, பலர் பலவிதமாக எண்ணுகின்றனர்; முதலில் ஒன்றை மறந்துவிடக் கூடாது — 'தி. மு. கழகம் வெறும் ஒரு அரசியல் கட்சி அல்ல,' என்ற உண்மையை!

அரசியல் கட்சியாக விளங்குகிற தி. மு. கழகத்தவர் நாடக, சினிமாத் துறைகளில் ஈடுபடும் போது, அரசியல் வாதிகள், 'சினிமாவிலும் நாடகத்திலும் ஈடுபடலாமா?' — என்று கேட்கின்றனர்? ஆனால், 'கல்கி'யார், 'தியாக பூமி' படத்திற்கு கதை—வசனம் எழுதுகிற காலத்திலும், சொக்கலிங்கம் சினிமாவில் சேர்ந்த காலத்திலும் இந்தக் கேள்வியைக் கேட்கவில்லை; எப்போது கேட்கிறார்கள் என்றால். தி மு கழகத்தவர் கலை உலகில் நுழையும்போதுதான் கேட்கின்றனர்!

தி. மு. கழகம் நாடகத்திலும், சினிமாவிலும் ஈடுபடுவானேன்?

தி. மு கழகம், சமுதாய வளர்ச்சிக்காக, நாட்டு விடுதலைக்காகப் பாடுபடும் ஒரு விடுதலை இயக்கம்; இது இந்த நாட்டில் உள்ள எல்லோரையும், கட்சிப் பாகுபாடுகூட இன்றி திராவிடர்கள் என்ற உணர்வை அவர்கள் பெற்றாக வேண்டும்; அந்தத் திராவிடர்களுக்கான நாட்டை திராவிடர்களே ஆளவேண்டும் என்னும் அவசியமான நல்லெண்ணம் அவர்கள் உள்ளத்திலே தோன்றியாக வேண்டும் என்று கருதி அதற்காக வேலை செய்து வரும் ஒரு தேசிய விடுதலை இயக்கம்.

ஒரு விடுதலை இயக்கம் ஒரு குறிப்பிட்ட பகுதி மக்களிடம் மட்டும் தன் கருத்தைச் சொல்லிவிட்டால் போதுமா? பெரும்பாலான மக்களுக்கு நம் கருத்துச் சொல்லப்பட்டாக வேண்டுமே?

நாம் நமது கருத்தைச் சொல்வதற்காக, நாட்டிலே சந்திக்க முடியாமற் போய்விடுபவர்கள் ஏராளம்; ஏடுகளின் மூலமாக, மேடைகளின் மூலமாகச் சந்திக்க முடியாதவரின் எண்ணிக்கை கணக்கற்றது; அவர்களை எல்லாம் சினிமாவிலே, நாடகத்திலே சந்திக்கிறோம்.

சாதாரணமாக ஏழைக்குக் கிடைக்கக் கூடிய ஒரே ஒரு மலிவான பொழுது போக்கு சினிமாதான்.

காலை மலரும்போது, மாலை மயங்கும்போது அரும்பும் இயற்கை அழகை அவன் கண்டு ரசிக்க முடியாது; அவைபோன்ற இயற்கைப் பொழிலை எண்ணிப் பார்க்கவும் இயலாதவனாயிருக்கிற ஏழையை நம் சினிமாவிலே, நாடகத்திலே தான் சந்திக்க முடியும். காலை முதல் மாலை வரை உழைத்து அலுத்துப் போயிருக்கும் அவனுக்கு சற்று தெம்பு கிடைக்கிறது—மனம் மகிழ்கிறது — சினிமா பார்ப்பதனால்!

நாம், பாரை மேடையிலும், ஏடுகளிலும் சந்திக்க இயலாதோர் அவர்களை, நாடகத்திலும் சினிமாவிலும் சந்திக்க இயலுவதால், அவர்களிடம் நம்முடைய லட்சியத்தைச் சொல்ல, கொள்கைகளை விளக்க நாடகத்தையும், சினிமாவையும் நல்ல சாதனங்களாகப் பயன்படுத்துகிறோம்; அவ்வளவே தவிர, நாடகமும், சினிமாவுமே அல்ல நமது லட்சியங்கள்.

நாம் தமிழ் உணர்வை மக்களுக்கு ஊட்டினோம்; தமிழ் மொழிக்கு ஆக்கந்தேடினோம் எனப் பெருமைப்படுகிறோமே. அத்தப் பெருமைக்குரிய தமிழ்ப் பணி முற்றும் பெற்றதாயிருக்க வேண்டாமா?

தமிழ் என்றால், இயல், இசை, நாடகம்—என மூன்று பிரிவுகளின், இயலையும்—இசையையும் மட்டும் கவனித்துவிட்டு, நாடகத்தை விட்டு விடுவதா?

ஆகவே நாம், நாடகத்துடனும், சினிமாவுடனும் கொண்டிருப்பது வெறும் தொடர்பு—அவைகளை நமது லட்சியங்களை ஏந்திச் செல்லும் சாதனங்களாகப் பயன்படுத்துகிறோம் என்னும் தொடர்பு தவிர, உறவு அல்ல; அல்லது அவையே நமது லட்சியமுமல்ல என்பதையும், நினைவில் வைத்திருக்க வேண்டும்."

வட இந்தியாவில் பிரிவினை உணர்வு!

மாநிலப் பிரிவினைக் குழுவிடம் கோரிக்கை

பாடியாலா, மே 4—

பெப்சு மாநிலத்தில் இந்தி பேசும் பகுதிகளில் உள்ள அரசியல் இயக்கமாகிய அரியானா பிரஜா மண்டல், மாநிலப் பிரிவினைக் குழுவிடம் அளித்துள்ள மனுவில் குறிப்பிடுவதாவது:

"பெப்சு மாநிலத்தை உடனடியாகக் கலைத்துவிட்டு, வட இந்தியாவில் மொழி, கலாசார அடிப்படையில் 3 மாநிலங்களாகத் தீர்க்கண்டபடி அமைக்கவேண்டுமென்று வற்புறுத்தியுள்ளது:

1, டில்லி மாநிலம் — புது டில்லி தவிர டில்லி மாநிலம்; பெப்சுவில் இந்தி பேசும் பகுதிகள்; டில்லியுடன் கலாச்சார முறையில் இணைந்துள்ள உத்தர பிரதேச மாவட்டங்கள்.

2 இமாசலப் பிரதேசம்—தற்போதுள்ள பகுதியும், பெப்சுவில் உள்ள மலைப் பகுதியான கண்டகாட் மாவட்டமும்.

3, பஞ்சாபிலும், பெப்சுவிலும் உள்ள மீதப் பகுதிகளை ஒரே மாநிலமாக இணைக்கவேண்டும்.

முக்கூடலில் - மே தினம்

காங்கிரஸ் களபதிகளின் கருத்தற்ற செயல்

முக்கூடல், மே 4—

முக்கூடல் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், மே தினம் கொண்டாட போலீஸ் அதிகாரியிடம் அனுமதி கேட்டு ஆவன செய்தார்கள்.

ஊர்வலம்

1—5—54-ல், தி. மு. கழகக் கட்டிடத்திலிருந்து சுமார் 300-க்கு மேற்பட்ட தி. மு கழகத் தொண்டர்கள் மாலை 6-30 மணிக்கு ஊர்வலம் புறப்பட்டு கொடிகளை ஏந்தி ஒலிகளிட்டுச் சென்று இரவு 8 மணிக்கு வடக்கு குமாரசாமிபாபுரம் தெருவில் அமைத்திருந்த மேடையை அடைந்தனர்.

காங்கிரஸ் களபதிகள்கூற்று

வடக்கு குமாரசாமிபாபுரம் தெருவில் அமைத்த மேடையில் இரவு 8 மணிக்கு பொதுக் கூட்டம் நடைபெறும் என விளம்பரம் செய்ததை அறிந்த காங்கிரஸ் களபதிகள் கூட்டத்தை நடத்தக்கூடாது என்ற நோக்கத்துடன் சில நபர்களிடம் கையெழுத்து வாங்கி மகஜர் தயார் செய்து போலீஸ் அதிகாரிக்கு அனுப்பிவிட்டு, தி மு கழகத் தோழர்களை பயமுறுத்திப் பார்த்தார்கள்; ஆனால், தி. மு கழகத் தோழர்கள் துணிவுடன் பொதுக்கூட்டம் நடத்த ஆரம்பித்தார்கள்.

பொதுக்கூட்டம்

இரவு 8 மணிக்கு தோழர் மா. சு. முத்துக்குட்டி தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர் சு கந்தசாமி மே தினம் கொண்டாடும் அவசியத்தைப் பற்றியும் இன்று நம் நாட்டில் காங்கிரஸ்காரர்கள் பொது ஸ்தாபனங்களில் இருந்து கொண்டு பொது மக்களுக்கு செய்யும் அநீதிகளைப் பற்றியும் பேசினார்.

போலீஸ் தலையீடு

பொதுக்கூட்டம் ஆரம்பித்து அரை மணி நேரத்திற்குப் பின் போலீஸ் அதிகாரிகள் வந்து யாதொரு காரணமும் காட்டாமல் கூட்டத்தை நிறுத்தும் படி கூறினர் உடனே தலைவரும் பேச்சாளரும் சேர்ந்து தகுந்த காரணம் காட்டாமல் கூட்டத்தை நிறுத்த மாட்டோம் என சொன்னவுடன் கூட்டத்திலிருந்த பொதுமக்களும் கூட்டத்தை எவ்வித காரணத்தை முன்னிட்டும் நிறுத்த வேண்டாம் என்று சொன்னதின் பேரில் கடைசிவரை கூட்டம் நடந்தது; போலீசார் திரும்பிச் சென்றார்கள். கடைசியில் தலைவர் நன்றி கூறுதலுடன் கூட்டம் அமைதியாக முடிந்தது.

* * *

விளாத்திகுளம் தி. மு. க.

2—5—54 இரவு 7 மணிக்கு இவ்வூர் பிள்ளையார் கோவில் முன்பு திரு யாகோப் தலைமையில் மாபெரும் பொதுக் கூட்டம் நடைபெற்றது தோழர்கள் சங்கரலிங்கம், வி. அருணசலம் எம். கந்தசாமி ஆகியோர் விரிவுரையாற்றினர்.

• • •

தென் ஆற்காடு, சேலம் மாவட்டத்தில் இரும்புத் தொழிற்சாலையை நிறுவுக!

நகராட்சி மன்றங்களின் தீர்மானம்

ஈரோடு, மே 4—

ஈரோடு நகராட்சி மன்றக் கூட்டம் தலைவர் எஸ். மீனாட்சி சுந்தரனார் தலைமையில் கூடிய போது தென்னாற்காடு, சேலம் பகுதிகளில் இரும்பு, உருக்குத் தொழிற்சாலை ஏற்படுத்தினால் இதையடுத்த மாவட்டங்களிலுள்ள பஞ்ச நிலைமையையும், வேலையில்லாத் திண்டாட்டத்தையும் போக்குமென்று தீர்மானித்தது.

• • •

அருப்புக்கோட்டை, மே 4—

27—4—54 அன்று நகராட்சி மன்றக் கூட்டம் துணைத் தலைவர் தோழர் எம் எஸ். இராமசாமி தலைமையில் கூடி கீழ்க்கண்ட தீர்மானங்களை நிறைவேற்றியது:—

"இரும்புத் தொழிற்சாலை ஒன்றை சேலம் மாவட்டத்தில் ஏற்படுத்த வேண்டுமென்று மத்திய அரசாங்கத்திடம் கேட்டுக் கொள்ளப்பட்ட கடலூர் ஆட்சி மன்றத் தலைவரின் தீர்மானத்திற்கு இம்மன்றமும் ஆதரவு காட்டுகிறது."

1953-54 ஆண்டிற்கு முதல் அரை ஆண்டிற்கு நெசவுத் தொழிலாளர்களுக்கு வீட்டு வரி குறைப்பு குறித்து, மன்றத்தில் தீர்மானித்து தமக்கு அனுப்பி வைக்குமாறு வந்த மாவட்ட கலெக்டரின் கடிதம் படித்துக் காட்டப்பட்டு, அதன்படி வரியைத் தள்ளுபடி செய்யப் பட்டது."

சித்தையன்கோட்டையில் கலவரம்

திண்டுக்கல், மே. 3—

சித்தையன் கோட்டையில் சில நாட்களுக்கு முன் ஒரு இந்து பெண்ணிடம் ஒரு முஸ்லிம் இளைஞன் தகாத முறையில் நடந்து கொண்டதாகக் கூறப்படுகிறது இது சம்மந்தமாக தேவாங்க செட்டியார்களுக்கும், முஸ்லிம்களுக்கும் கலவரம் ஏற்பட்டதால் அடிதடி, அரிவாள் வெட்டு, திராவக வீச்சு ஆகிய சம்பவங்கள் நடைபெற்றன. இருதரப்பிலும் சிலர் காயமடைந்தனர்.

பின்னர் திண்டுக்கல் போலீஸ் குழுவினர் சம்பவம் நடைபெற்ற இடத்திற்குச் சென்று மேற்கொண்டு எதுவும் நிகழாவண்ணம் தடுத்தனர். இது சம்பந்தமாக சிலர் கைது செய்யப்பட்டு ஜாமீனில் விடப்பட்டதாகத் தெரிகிறது.

திரு. வி. க. முதியோர் பாடசாலை

2—5—54 மாலை சென்னை—பெரம்பூர் ராமானுஜ கார்டன் தெரு 20/2 இல்லத்தின் மேல் மாடியில் மேற்படி பாடசாலையின் சார்பில், தோழர் எம். மாணிக்கம் தலைமையில் மே தினம் கொண்டாடப்பட்டது.

தோழர்கள் எஸ். வெங்கட்ராமுலு, தங்கராஜன், கே. கஜபதி எ. கே சாமி, சி. கே. நாராயணன் ஆகியோர் பேசினர். தீர்மானங்கள் பல நிறைவேற்றப் பட்டன.

* * *

மீன் பிடிப்போர் கிளைச் சங்கம்

சென்னை, மே. 3—

1—5—54 மாலை 6 மணிக்குத் தோழர் பி கோவிந்தன் தலைமையில் இராயபுரத்தைச்சேர்ந்த காசிபுரம் மீன் பிடிப்போர் கிளைச் சங்க சார்பில் மே தின விழா நடைபெற்றது. அது சமயம் நீல மன்ற தோழர்கள் பலர் மே தினத்தைப் பற்றியும், மீனவர்கள் நிலையைப் பற்றியும் பேசினர். பின்னர் பிரெஞ்சிந்திய போலீசார் தாக்குதலால், உயிரிழந்த தோழர்கள் அச்சுதன், ஆனந்தன் குடும்பத்தினருக்கு அனுதாபம் தெரிவித்தும், அமெரிக்கா வீசிய கீர்வலிக் குண்டு பயிற்சியினால் ஜப்பான் மீன் பிடிக்கும் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டதைக் கண்டித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. இரவு 9 மணிக்கு கூட்டம் முடிவுற்றது.

★★★★★★★★★★★★

பம்பாய் தி.மு.கழக பொதுக் கூட்டம்

மே 8. 9 சனி, ஞாயிறுகளில் மாலை 6-30 மணிக்கு

இடம்:

குட்டிவாடி மைதானம், தாராவி

முதல் நாள்:

தலைவர்: க. வள்ளிநாயகம்

கொடியேற்றுபவர்:

கே. கே. இராமனுஜன்

வரவேற்பாளர்:

உ. அ. சேல்லையா

★

இரண்டாம் நாள்:

தலைவர்: எஸ். தியாகராசன்

சி. பி. சிற்றரசு

இரு நாட்களிலும் பேசுவார்

★★★★★★★★★★★★

புதிய அமைச்சரவை எதிர்காலம்

முத்துராமலிங்கத் தேவரின் நிர்ணயம்!

அலங்காநல்லூர், மே. 3—

"புதுக் கல்வித் திட்டத்தைக் கைவிடாமலிருந்தால் ஆச்சாரியார் அமைச்சரவைக்கு ஏற்பட்ட கதியே புதிய அமைச்சரவைக்கும் ஏற்படும்."

இவ்வாறு இங்கு நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பேசுகையில் தோழர் முத்துராமலிங்கத் தேவர் தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில், கூறியதாவது:—

"பிரெஞ்சிந்தியாவில் நடைபெறும் விடுதலைப் போராட்டத்தை உண்மையாகவே நேரு ஆதரித்தால், ஒன்று பிரெஞ்சிந்தியப் பகுதிகளுக்குள் இந்தியப் படைகளை பிரவேசிக்கச் செய்து போராட்டத்தை தீவிரமாக்க வேண்டும்; அல்லது சாதாரண மனிதர்களைப்போல் மாற்று உடைகளில் இந்தியப்படை வீரர்களை பிரெஞ்சிந்தியாவிற்குள் பிரவேசிக்கச் செய்து அங்குள்ள மக்களுக்கு இராணுவபோராட்ட முறையை கற்றுக்கொடுத்து போராடும்படி செய்யவேண்டும். இவைகளைச் செய்யத் துணிவு ஏற்படாவிட்டால் பிரெஞ்சிந்திய பற்றிப் பேசாமலாவது நேரு இருக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்," என்றார்.

★

'சேவகனின் நிலைமைக்கு சமமாகக் கூட இல்லை'

ஆசிரியர்கள் நிலை பற்றி முத்துராமலிங்கத் தேவர்

தேவகோட்டை, மே 3—

"நம் நாட்டில் ஆசிரியர்களின் நிலை மத்திய அரசாங்கத்தின் சேவகனின் நிலைக்கு சமமாகக் கூட இல்லையென்றும், புதிய ஆரம்பக் கல்வித் திட்டம் உதவாக்கரை திட்டம்" என்றும் 29 4-54ல் திருவேங்கடமுடையான் உயர்தர ஆரம்பப் பள்ளியின் 8-வது ஆண்டு விழாவில் பேசுகையில் தோழர் உ. முத்துராமலிங்க தேவர் எம். எல். ஏ. குறிப்பிட்டார்.

நியூட்டன்—கண்ணன்........

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மக்கள் செலுத்தும் பக்திப் பிரவாகத்திற்குத்தான் என்ன குறைவா?

ஆண்டவனுக்கு இந்த நாட்டிலே, தான் பெற்ற பிள்ளையை அறுத்துக் கறி சமைத்துத் தந்திருக்கிறார்கள்; தனது கண்களைப் பிடுங்கிக் கொடுத்திருக்கிறார்கள்; இன்னும் மனைவிமாரை ஆண்டவனுடன் அனுப்பித் தந்திருக்கிறார்கள்—இப்படி எத்தனையோ காணிக்கைகள் கடவுளுக்குத் தந்திருக்கிறார்கள். இந்த நாட்டிலே தரப்பட்டதைப் போன்று வேறு எந்த நாட்டிலும், பக்திக் காணிக்கைகள் தரப்பட்டதில்லையே! இருந்தும், நமது கேடுகள் நீங்கவில்லை என்றால், நமது சமுதாயத்திற்கு நல்வாழ்வு கிடைக்கவில்லை என்றால், அதற்கும் பக்திக் குறைவா காரணம்?

இந்த நாட்டிலே, என்று ஆரியர் காலெடுத்து வைத்தார்களோ அன்றுதானே இந்த கேடுகளுக்கான விஷ விதைகள் தூவப்பட்டன. அதன் விளைவுதானே இன்றும், படித்துப் பட்டம் பெற்றிருந்தாலும் பகுத்தறிவை இழந்து மூடப் பழக்கங்களை கைவிட மறுக்கிறார்கள்—மனமில்லாதவர்களாயிருக்கின்றனர்!

விஞ்ஞானம், விவசாயத்திற்குப் புதிய கருவி கண்டது—டிராக்டர்! அதற்குப் பொட்டு வைத்து சூடம் கொளுத்துகிறார்களே, அதை முதன்முதலில் ஓட்டும்போது! ரேடியோ கண்டான் விஞ்ஞானி; அதற்கும் அந்த நிலைதானே!

பெரும் அரசியல் தத்துவ ஞானி என்று உலகம் புகழும் ஆற்காடு சர். ராமசாமி, சமீபத்தில், தான் டைரெக்டராயிருக்கும் சைக்கிள் கம்பெனியில் தயாரான முதல் சைக்கிளை, திருப்பதி வெங்கடேசனுக்குக் காணிக்கையாகத் தந்திருப்பதாகப் பத்திரிகையில் கண்டோமே! இது எதைக் காட்டுகிறது?

எவ்வளவுதான் படித்த பட்டதாரியானாலும், இந்த ஆண்டவனிடம் காட்டும் பக்தி விஷயத்திலே பகுத்தறிவின்றி நடந்துகொள்வதைத்தானே நமக்குச் சொல்லுகிறது!

ஒரு மரத்தடியிலே உட்கார்ந்திருந்த நியூட்டன் பழம் ஒன்று மரத்திலிருந்து கீழே விழுந்ததைக் கண்டான்; அவனுடைய தீவிரமான சிந்தனை, பழம் கீழே விழுவதற்குக் காரணம், பூமிக்கு ஆகர்ஷண சக்தி இருக்கிறது என்ற உண்மையை, உலகுக்குத் தந்தது.

ஆனால், புராணத்திலும் இப்படிப் பழம் கீழே விழும் காட்சியொன்று வருகிறது—கிருஷ்ண பரமாத்மா ஒருமுறை பஞ்சபாண்டவர், அவர்தம் அருமை பத்தினி திரௌபதி ஆகியோருடன் கானகம் சென்றிருந்தபோது ஒரு மாமரத்திலிருந்து ஒரு பழம் கீழே விழுந்ததாம்; அந்தப் பழம் ஏன் விழுந்ததென்று தெரியவில்லை, நமது ஆண்டவனின் அவதாரமான கிருஷ்ண பரமாத்மாவிற்கு! ஆனால், ஒரு முனி புங்கவர் சொன்னாராம்: ‘நீங்கள் எல்லோரும் ஒவ்வொரு உண்மை சொன்னால் மீண்டும் பழம் மரத்தில் ஒட்டிக்கொள்ளும்’ என்று! உடனே கிருஷ்ணன் ஒரு உண்மை சொன்னதும் பழம் கொஞ்சம் உயரச் சென்றதாம்; பஞ்ச பாண்டவர் ஒவ்வொருவரும் ஒரு உண்மை சொல்லச் சொல்ல பழம் மரத்தருகே போய் நின்றதாம்; கடைசியாக திரௌபதி ஒரு உண்மை சொன்னால் பழம் மரத்தில் ஒட்டிக் கொள்ளும் நிலையில் பழம் நின்றுகொண்டிருந்ததாம்; திரௌபதி, ‘நான் ஐவருக்கும் பத்தினி என்பது உண்மையானால், பழமே, ஒட்டிக்கொள்’, என்றாளாம்; ஆனால் பழம் ஒட்டவில்லையாம்; உடனே முனிபுங்கவர் ‘திரௌபதி சொன்னது உண்மையல்ல’, என்றாராம்; மீண்டும் திரௌபதி, ‘பஞ்சபாண்டவர் தவிர நான் கர்ணன் மீதும் காதல் கொண்டுள்ளது உண்மையானால் பழமே ஒட்டிக்கொள்’, என்றாளாம்; பழம் ஒட்டிக் கொண்டதாம்! இது எதைக் காட்டுகிறது? திரௌபதியின் ‘பத்தினித் தன்மையைக் காட்டியதைத் தவிர, வேறு என்ன உண்மையைக் காட்டுகிறது?

எனவேதான் நாம் சொல்கிறோம்—பழமை எண்ணங்கள் மக்கள் மனத்திலிருந்து அகற்றப்பட்டு, புதிய விஞ்ஞானக் கருத்துக்கள் மக்கள் மனதிலே புகுத்தப்பட வேண்டும்—என்று! அதற்கு இந்த சமூக சீர்திருத்த மாநாடு பெரிதும் பயன்படும் என்று நான் நம்புகிறேன்.”

வார்த்தை உச்சரிப்பு செய்த கோளாறு!

☆

புதுடில்லி, மே. 3—

வார்த்தை தடுமாற்றத்தின் காரணமாக சென்னை சர்வகலாசாலை ஒன்றுக்குக் கிராண்டு கேட்க, வேறொன்றுக்குக் கிராண்டு கொடுக்கப்பட்டதா என்று மக்கள் சபையில் கேட்கப்பட்டது.

“மனித உடற்கூறு ஆராய்ச்சிக்காக சென்னை சர்வகலாசாலைக்கு கிராண்டு கொடுக்கப்பட்டதா?” என்று டாக்டர் ராமராவ் கேட்டார்:

“இதற்காக ரூ 50,000 கொடுக்கப்பட்டது உண்மைதான்.” என்று கல்வி மந்திரியின் பார்லிமெண்டரி காரியதரிசி பதிலளித்தார்

“சென்னை மனோதத்துவ ஆராய்ச்சிக்கு கிராண்டு கேட்க, தவறி இவ்வாறு கொடுக்கப்பட்டது உண்மையா?” என்று அங்கத்தினர் மீண்டும் கேட்டார் (ஆங்கிலத்தில் உடல் கூறு ஆராய்ச்சிக்கு ‘பிஸியாலஜி’ என்றும், மனோதத்துவ ஆராய்ச்சிக்கு ‘சைகாலஜி’ என்றும் கூறுவர். இவ்விரு வார்த்தைகளுக்கும் ‘உச்சரிப்பு’ ஒரே மாதிரியாகக் கிட்டத்தட்ட இருக்கும்)—“இந்த வார்த்தைகள் தடுமாற்றத்தால்தான் கிராண்டு மாற்றிக் கொடுக்கப்பட்டதா?” என்று அவர் விளக்கினார்.

கிராண்டு கொடுத்தது உடற்கூறு ஆராய்ச்சிக்காகவே என்றும் சென்னை சர்வகலாசாலை இதற்காக ஒரு திட்டத்தை சமர்ப்பித்துள்ளதென்றும் பார்லிமெண்டு காரியதரிசி சொன்னார்.

இந்தியாவில் தற்போது 1,035 டெலிபிரிண்டர்கள் வேலை செய்துவருகின்றன.

மதம்—எத்தர்களின் ஏவலாளி........

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கற்பிழந்தாள் அகலிகை என்றும் பகவத்கீதை, ‘போரிலே அண்ணன்—தம்பி என்று பாராதே,’ என்றும், நெறி தவறினான் விசுவாமித்திரன் என்றும், கன்னியர் பலருடன் கண்ணன் லீலைகள் புரிந்தான் என்றும் சொல்லப்பட்டால் மக்கள் மனதிலே, நல்வாழ்வுக்கான, ஒழுக்கமான எண்ணங்களையா இவை தூண்டும்?

தவறுகள் செய்கிற மனிதர்கள், தவறுகளை உணர்ந்து திருந்துவதற்கு மாறாக, இந்தத் தவறுகள் எல்லாம் புராண புருடர்கள் செய்ததுதானே என்றுதானே எண்ணுவர்?

எனவேதான் நாம் சொல்கிறோம்—பழமை எண்ணங்கள், புராணப் புளுகுகள் எல்லாம் மக்கள் மனதிலிருந்து தூக்கி எறியப்பட்டு, புதிய எண்ணங்களும், கருத்துக்களும் மக்கள் மனதில் இடம் பெற வேண்டும். பழமை விரும்பிகள், பழமைக் கருத்துக்களைப் புகுத்துவதினின்றும் தடுக்க சட்டங்கள் செய்யவேண்டும்,”

பழுப்பு நிலக்கரியிலிருந்து மின்சார உற்பத்தி

அலுமினியம் தொழிற்சாலை இயங்குகிறது

நியூயார்க், மே. 4—

பழுப்பு நிலக்கரியிலிருந்து மின்சாரத்தை உற்பத்தி செய்து அதனால் இயங்கும் ஒரு அலுமினிய உற்பத்திசாலை தென்மேற்கு அமெரிக்காவில் டெக்ஸாஸில் ராக்டேல் என்ற இடத்தில் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. பழுப்பு நிலக்கரியிலிருந்து மின்சாரம் உற்பத்தி செய்யும் இடம் இது ஒன்றே. ஆண்டொன்றுக்கு 90,000 டன் அலுமினியம் இங்கு உற்பத்தி செய்யப்படுகிறது.

பழுப்பு நிலக்கரியை எரித்துத் தண்ணீரை நீராவியாக்கி, நீராவியைக் கொண்டு டர்பைன் இயந்திரங்களை இயக்கி, மின்சாரம் எடுக்கப்படுகிறது பழுப்பு நிலக்கரியை எரிக்குமுன், அதிலிருந்து தார் எடுத்து லாபகரமாக விற்கலாம் என்று தெரிகிறது. இதற்குரிய முறை அமெரிக்கச் சுரங்க இலாகா கண்டுபிடித்துள்ளது.

அமெரிக்காவில் இருக்கும் பெரும்பாலான அலுமினிய உற்பத்தி சாலைகளில் மின்சாரம் தான் உபயோகப்படுகிறது பழுப்பு நிலக்கரி மின்சார உற்பத்திக்காகப் பயன்படுவது இதுவே முதல் தடவையாகும்.

குறிப்பு: சென்னை மாநிலத்தில் பழுப்பு நிலக்கரியிலிருந்து மின்சாரம் உற்பத்தி செய்தால் சேலத்தில் கிடைக்கும் அலுமினிய தாதுவைப் பயன் படுத்திக் கொள்ள அலுமினியத் தொழிற்சாலை ஏற்படுத்த முடியும் என மத்திய சர்க்காருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

சேர்வராயன் மலையில் “பாக்சைட்” (அலுமினியத் தாது) நிறைய இருப்பதாகவும், 2 கோடி டன் அலுமினியம் உற்பத்தி செய்ய முடியும் என்றும் மந்திரியிடம் அறிவிக்கப்பட்டது.

சேலம் மாவட்டத்திலுள்ள இரும்பு சுரங்கங்களிலிருந்து இரும்பை எடுத்து வேலை செய்யுமாறும் வற்புறுத்தப்பட்டுள்ளது.

உலக பாங்கியிடமிருந்து இந்தியாவின் கடன்

மக்கள் சபையில் தகவல்

புதுடில்லி, மே. 3—

மத்திய—சர்க்கார் இரும்பு உருக்கு தொழிற்சாலை அமைப்பதற்கு உலக பாங்கியிடமிருந்து கோரியிருக்கும் கடன் பற்றி பாங்கி இன்னும் பரிசீலனை செய்துவருவதாக மக்கள் சபையில் அறிவிக்கப்பட்டது.

உலக பாங்கி 31—3—54 வரை கொடுத்த சுமார் ரூ 22 கோடியை உபயோகப்படுத்தியிருப்பதாகவும் அறிவிக்கப்பட்டது. பல்வேறு மாநிலங்களுக்கும் போதுமை கடன் நிதியிலிருந்து அபிவிருத்தித் திட்டங்களுக்காகக் கொடுக்கப்பட்ட ரூ 2060 கோடியில் சென்னையில் நீர்ப்பாசனத் திட்டங்களுக்காக ரூ 276 லட்சம் கொடுக்கப்பட்டிருக்கிறதென்றும் கூறப்பட்டது.

தொழில் நிதிக் கார்ப்பரேஷனுக்கு உலக பாங்கியிடமிருந்து சுமார் ரூ 860 லட்சம் இந்தியா கடன் வாங்க உத்தேசித்த திட்டத்தைக் கைவிட்டுவிட்டதாக அறிவிக்கப்பட்டது.

முகமதலியின் போக்கு

பாக். பத்திரிகை கண்டனம்

லாகூர், மே 3—

இலங்கையில் நடந்த தென்கிழக்கு ஆசியப் பிரதமர்கள் மாநாட்டில் இந்தோ—சீனு சம்மந்தமாக பாகிஸ்தான் பிரதமர் கையாண்ட கொள்கையைக் கண்டித்து “பாகிஸ்தான் டைம்ஸ்” என்ற பத்திரிகை, ‘கம்யூனிசத்தைவிட ஏகாதிபத்தியமே மேல்’ என்று அவர் சொன்னதைக் குறிப்பிட்டுக் கூறுவதாவது:

“இவருடைய பேச்சு அமெரிக்க நாட்டு மெக்கார்தியைக் கூட பிரமிக்க வைத்துவிட்டிருக்கும்; கம்யூனிசத்தை ஒழிப்பதென்ற பெயரால் ஏகாதிபத்திய ஆட்சி நீடிப்பதை நம் மக்கள் சகித்துக் கொண்டிருப்பார்கள் என்று நினைப்பதைவிடப் பெரிய அளவில் அவர்களுடைய சுதந்திர உணர்ச்சியைக் கேலி செய்ய முடியாது” என்று குறிப்பிடுகிறது.

இந்தியாவில் உள்ள இரவு விமான சர்வீசுகள், 1953-ல், தினசரி சராசரியாக 8,718 பவுண்டு தபால்களையும், 3,107 பவுண்டு சாமான்களையும், 67 பிரயாணிகளையும் ஏற்றிச்சென்றிருக்கிறது.

சேலம் மாவட்ட அபிவிருத்தி திட்டம்

மத்திய அமைச்சரிடம் எம். பி.-க்கள் கோரிக்கை

சேலம், மே 1—

சேலம் மாவட்ட பார்லிமெண்டு உறுப்பினர்களான சிஆர் நரசிம்மன், எஸ். வி. ராமசாமி இருவரும் திட்ட மந்திரி எல். நந்தாவிடம் சேலம் மாவட்ட அபிவிருத்தி குறித்து கீழ்கண்ட பல யோசனைகள் அடங்கிய மனு ஒன்றை சமர்ப்பித்துள்ளனர்

ஹொகனக்கல் மேகதாது மின்சாரத் திட்டங்களைப் பரிசீலனை செய்து, சேலம் மாவட்டத்திலுள்ள கனி பொருட்களை எடுத்துப் பயன் படுத்துமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது.

இந்த மின்சாரத் திட்டங்களை ஏற்படுத்துவதால் மின்சார வெட்டைத் தவிர்ப்பதுடன் நெய்வேலியில் ஒரு மின்சார நிலையம் ஏற்படுத்துவதால் சேலம் மாவட்டத்தில் பல தொழில்களை அபிவிருத்தி செய்ய முடியும் என்றும் குறிப்பிடப்பட்டது.

தொப்பையாறு, கூடமலை, வாணியாறு, சின்னாறு போன்ற நீர்ப்பாசனத் திட்டங்களை அமுல் செய்யுமாறு வற்புறுத்தப்பட்டது.

சேலம் மாவட்டத்தில் அலுமினியம் தொழிற்சாலை ஏற்படுத்துவதை அடுத்த ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று கோரப்பட்டது.

உங்களுக்குத் தெரியுமா?

★

கேள்விகள்:

1 இந்திய ரயில்வே பிரயாணிகளிடமிருந்து கிடைக்கும் வருமானத்தில் நூற்றுக்கு எத்தனை ரூபாய்வீதம் மூன்றாவது வகுப்புப் பிரயாணிகளிடமிருந்து கிடைக்கிறது?
   (அ) 52 ரூபாய்
   (ஆ) 67 ரூபாய்
   (இ) 88 ரூபாய்

2. பாலைவனங்களில் காடு வளர்ப்பது பற்றிய மத்திய ஆராய்ச்சி நிலையம் எங்கு உள்ளது?
   (அ) டில்லியில்
   (ஆ) ஜோத்பூரில்
   (இ) ஜெய்சால்மீரில்

3 கடப்பு ஆண்டில், கோதுமை சாகுபடி விஸ்தீரணம், 1952-53-ம் ஆண்டிலிருந்ததைக் காட்டிலும் எவ்வளவு அதிகம்?
   (அ) 75,000 ஏக்கரா
   (ஆ) 90,000 ஏக்கரா
   (இ) 1,50,000 ஏக்கரா

4. எல்லாம் தாராளமாகப் பணம் செலுத்த வேண்டுமென்று பிரதம மந்திரி வேண்டுகோள் விடுத்துள்ள, தேசியத் திட்ட கடனுக்குக் கொடுக்கப்படும வட்டி விகிதம் எவ்வளவு?
   (அ) $1\frac{1}{2}$ சதவிகிதம்
   (ஆ) $2\frac{1}{2}$ சதவிகிதம்
   (இ) $3\frac{1}{2}$ சதவிகிதம்

5 பின்வரும் வாக்கியங்களில் எது சரி?
   (அ) தாமோதர் நதிப் பள்ளத்தாக்குத் திட்டத்தில், கல்கத்தாவிலிருந்து, ராணிகஞ்ச் நிலக்கரிச் சுரங்கப் பிரதேசத்துக்கு கால்வாய் ஒன்றை வெட்டுவதற்குத் திட்டமிடப்பட்டிருக்கிறது;
   (ஆ) கக்ராபார் அணைத் திட்டத்தின் கீழ், கடலிலிருந்து கக்ராபார் அணை வரையிலும், மேற்கொண்டு 50 மைல் தூரம் வரையிலும், கப்பல் போக்குவரத்துக்கு ஏற்ற கால்வாய்களை ஏற்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளன;
   (இ) ஹிராகுத் அணைத் திட்டத்தின் கீழ், மகாநதியில் கடலிலிருந்து சுமார் 300 மைல் தூரம் வரையில் கப்பல் போக்கு-வரத்துக்கு வசதி செய்யப்படும்.

விடைகள்:

1 (இ), 2. (ஆ), 3. (இ), 4 (இ), 5 (எல்லா விடைகளும் சரி).

இந்தியாவிலுள்ள சர்க்கரை ஆலைகளில் 1952—53-ல், மொத்தம் 181.7 லட்சம் டன் கரும்பு பிழியப்பட்டது; 1951—52-ல், சுமார் 159.9 டன் கரும்பும், 1950-51-ல், சுமார் 109.7 லட்சம் டன் கரும்பும் உபயோகிக்கப்பட்டன.

திராவிட முன்னேற்ற கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று (24, சூரிய நாராயண செட்டித் தெரு, இராயபுரம்) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம். ஏ.,